**விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமாக நிருவகித்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டதின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக திட்டம் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும் எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு நியமங்களுடனான இனக்கமின்மைகள்

| உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் விவசாய ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியப் பொறுப்பிற்காக காலக் கணிப்பு மதிப்பீடானது காலரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 இல் | 2007 ஆம் ஆண்டின் போது விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட காலக் கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படை யாகக் கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணக்கீடு | ஓய்வூதியப் பொறுப்பிற்கான காலக் கணிப்பு மதிப்பீடானது கால ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு ஓய்வூதியப் பொறுப்பு அவ்வாறான காலக்கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் ரூபா 70,252,869,112 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | செய்யப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியத் திட்டம் சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டதல்லாததனால் எதிர் காலத்தில் இத்திட்டத்தினை மீளமைப்புச் செய்து உரிய முறைப்படி பொறுப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு நியாயமான பங்களிப் பொன்றை ஓய்வூதியப் பங்களிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்குரிய கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இது தொடர்பாக முறையான வகையில் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு முடியுமென கருதுகின்றேன். | |

**1.5.2 முன்மொழிவுத் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்ண்டின் இறுதியில் சபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 74,347,975,129 ஆன மறை மீதியொன்றாக இருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்களை மிகைத்து நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 5,098,968,963 ஆக இருந்தது. 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் விவசாயிகள் ஒய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் கட்டளையின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மேற்கொண்டிருந்தும் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தல் 1987 மே 07 ஆந் திகதிய 452/12 ஆம் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட முறையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 மற்றும் 2019 | 153/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஓய்வூதியத் திட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டு பேணக்கூடிய புதிய ஒரு ஓய்வூதியத் திட்டம் அதன் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. விவசாயிகள் ஓய்வூதிய நிதியம் பூச்சியமாக இருந்தும் ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்வதற்காக திறைசேரியின் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உருவாகியுள்ள | திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் சுய நிதி அடிப்படையில் பேணக்கூடிய புதிய விவசாயிகள் ஓய்வூதியத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆம் ஆண்டுகளின் போது பங்களிப்பு முறையே ரூபா 24,552,961 மற்றும் ரூபா 21,495,773 ஆக இருந்ததுடன் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 3,059,370,767 மற்றும் ரூபா 3,217,332,522 ஆக இருந்தன. ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரித்ததன் காரணமாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,725,000,000 மற்றும் ரூபா 3,065,000,000 திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இல்லாமல் திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

ஓய்வூதியப் பொறுப்புக்கு ஒத்ததாக நிதியத்தை கட்டியெழுப்புவதற்காக திறைசேரிக்கு தற்பொழுது தேவையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| (அ) 4 ஆம் பிரிவு | உரிய தகைமைகளை கொண்டுள்ள 18 வயதிற்கு குறைந்த 18 வயதுக்கு குறையாத மற்றும் 59 வயதுக்கு மேற்படாத விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது நிரந்தரமாக, அரைகுறையாக பலவீனமடையும் போது அல்லது முழுமையாகப் பலவீனமடையும் பொருளாதார ரீதியாக ஏதாவது சலுகைகளை | 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஓய்வூதியங்கள் செலுத்தப்பட்டிருந்தும் இத் திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய தவணைப் பணம் அதிக பெறுமதியைக் கொண்டிருந்ததனால் இது தொடர்பாக நடை பெற்ற கலந்துரையாடலின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் இந்த ஓய்வூதியத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கா | ஓய்வூதியத் திட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் அங்கத்தவர்களை தொடர்ச்சியாக சேர்த்துக்கொள்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குவதற்கு படிகளைச் செலுத்துதல், மரணத்தின் போது மரணப் பணிக்கொடையைச் செலுத்துதல், மற்றும் 60 வயதினைப் பூர்த்தியடையும் போது காலப்பகுதியின் பிரகாரம் ஓய்வூதியங்களைச் செலுத்துவது நோக்கமாக இருந்த போதும் 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை முன்மொழிவுத் திட்டத்திற்கு எந்தவொரு அங்கத்தவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | க தேவையான அறிவுறுத்தல்களை வழங்குமாறு நிதி அமைச்சரின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் இத்திட்டத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கு தாமதிக்க நேர்ந்தது. 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப் பட்ட அரச கொள்கை மாற்றத்துடன் புதிய விவசாய ஓய்வூதிய முறைமை ஒன்ற தயாரிக்கப்பட்டு அது அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நிபுணத்துவ குழு வொன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 2019 புதிய அரசாங்கத்தின் கொள்கை கூற்றின் பிரகாரம் ஓய்வூதிய பங்களிப்பாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 15(2),(3) ஆம் பிரிவுகள் | எவரேனும் ஒரு பங்களிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் கீழ் நலன்கள் இழக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தல் ஒன்று மூலம் அப்பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆவ்வாறு செய்யாத காரணத்தினால் தவணை | விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள பங்களிப்பாளர்கள் தொடர்ச்சியாக 05 தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவர்களின் பங்களிப்பு இரத்துச் செய்யப்படுவதுடன் அது தொடர்பாக அவர்களை | நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தலை அப்பங்களிப்பாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தாமல் இரத்துச் செய்யப்பட்ட சான்றிதழொன்றை மீண்டும் செல்லுவடியாக்குவதற்கு பங்களிப்பாளருக்கு அவ்வேளையில் தமது சான்றிதழினை செல்லுபடியாக்கி கொள்வதற்காக சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் 60 வயதை பூர்த்தி செய்து ஓய்வூதியத்திற்கு உரித்துள்ளதாக கருதி ஓய்வூதிய விணணப்ங்களை சமர்ப்பித்த 1,863 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சேர்த்துக்கொள்ளும் போது தேவையான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆர்களுக்கு வழங்கும் தவணை குறிப்பு புத்தகத்திலும் சான்றிதழிலும் அது தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பங்களிப்பை முடிவுறத்திய விவசாயிகளின் செலுத்திய தவணைப் பணங்களை அவர்களின் 60 வயது பூர்த்தியடைந்த சந்தர்ப்பத்தில் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 20 ஆம் பிரிவு | மதியுரைக் குழுவிற்காக உத்தியோகபூர்வமாக நியமனம் செய்யப்படும் 06 உறுப்பினர்கள் மற்றும் பெயரிடப்பட்ட 06 உறுப்பினர்களாக 12 பேர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 06 ஆந் திகதி வரை சகல உறுப்பினர் நியமனம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆதன் காரணமாக மீளாய்வாண்டில் மதியுரைக் குழு கூட்டப்படாமல் இருந்ததுடன் இறுதியாக மதியுரைக் குழு | விவசாய ஓய்வூதிய மதியுரைக் குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மதியுரை குழு கூடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | மதியரை குழு கூடி முன்மொழிவு முறைமையின் முன்னேற்றத்திற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 2016 நவம்பர் 03 திகதியே கூடியிருந்தது. இதன் பிரகாரம் மதியுரைக் குழு 03 ஆண்டுகளில் மதியுரை குழு நடாத்தப்படடிருக்க வில்லை. | |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டத்தின் 03 வங்கி கணக்குகள் தொடர்பாக 1992 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தீர்வையாகாத ரூபா 1,179,624 பெறுமதியான 117 காசோலைகள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இம் மீதிகள் 15-25 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பழைய மீதியாக உள்ளதுடன் 2003 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக தேடிப் பார்த்து சரிசெய்யக்கூடிய அனைத்து மீதிகளையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவ்வாறு தேடிக் கண்டு பிடிக்க முடியாத மீதிகளே இவ்வாறு முன்கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலைமையானது பெரும்பாலும் ஒரு காசோலைக்கு இரண்டு தடவைகள் பற்றுச்சீட்டுக்கள் வழங்கியமையே காரணமாக இருந்தது. இது தொடர்பாக அடிக்கடி கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போதும் திறைசேரியில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதும் விளக்கமளிக்கப்பட்டதன் பின்னர் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | ஒரே காசோலைக்கு இரண்டு பற்றுச்சீட்டுக்கள் விநியோகிப்பது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் திட்டத்தின் செயற்படுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை 959,254 ஆக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் பின்னர் முன்மொழிவுத் திட்டத்திலிருந்து விலகிய, பலவீனமடைந்த, மரணித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தவணை கொடுப்பனவு செய்யாமை என்ற அடிப்படையில் விலகுதல் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் செயற்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை, வருடாந்தம் சேகரிக்கப்பட வேண்டிய பங்களிப்பு, செலுத்த வேண்டிய சரியான ஓய்வூதியத்தின் பெறுமதி எவ்வளவு என கணித்துக்கொள்ள நலத்திட்டத்திற்கு முடியாதிருந்தது. | முன்மொழிவுத் திட்டத்தின் செயற்படுகின்ற பங்களிப்பாளர்களை இனங் காண்பதற்காக பின் தவணை கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தொடர்ச்சியான பின்தவணை தவணைகளை கணனி மயப்படுத்தும் செயற்பாட்டினை மேற் கொள்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளதுடன் தற்போது மூன்று பயிலுனர்கள் பின் தவணை கணனி மயப்படுத்தலுக்காக முழு நேரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இத்தரவுகளை உள்ளடக்கும் இயலளவு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. முன்மொழிவுத் திட்டத்திலிருந்து விலகிய, பலவீனமடைந்த மரணித்தவர்களின் தகவல்களை நாளது வரையாக பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | தகவல் முறைமையை நாளது வரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 58,984,105 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 312,010,448 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 253,026,343 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. திறைசேரியின் மானியங்கள் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட விவசாய பங்களிப்பாளர்களின் ஆயுள் தரவு தகவல்களை உள்ளடக்கி முறைமையினை நாளது வரையாக்க வேண்டுமென 2015 ஆகஸ்ட் 25 நடைபெற்ற மதியுரைக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,726,875 செலவிடப்பட்டு 08 மாவட்டங்களில் மாத்திரம் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் இச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு தரவு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தின் பங்களிப்பை நாளது வரையாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது தகவல்களைச் சமர்ப்பித்திருந்த விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை மாவட்ட மட்டத்தில் கணனிமயப்படுத்தி நாளது வரையாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. சபை எதிர்பார்த்தவாறு விவசாயிகளின் மீளாய்விற்கு உரிய முறையில் தகவல்களை சமர்ப்பிக்காததன் காரணமாக உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் இத்தகவல்களை நாளதுவரை யாக்குவதற்காக பொருத்தமான நடைமுறையைப் பின்பற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. | விவசாயி பங்களிப்பாளர் களின் ஆயுள் தரவுத் தகவல்களை உள்ளடக்கிய முறைமையை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட சட்டத்தின் பிரகாரம் 60 வயதைப் பூர்த்தியடைந்த திகதியிலிருந்து அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்கு முரணாக நிறுவனத்தினால் ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தமையால 2017 ஏப்ரல் மாதத்திலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 27,049 விவசாயிகளுக்கான ரூபா 584,359,397 கூட்டுத்தொகையான ஓய்வூதிய நிலுவை | 20,000 இற்கு மேற்பட்ட விவசாயிகளின் அளவொன்று ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வதற்காக காத்திருக்கும் பட்டியலில் இருப்பதால் அவ்விவசாயிகளுக்கு துரிதமாக ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்வதற்காக ஓய்வூதிய பதிவட்டிக்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதனால் காத்திருக்கும் பட்டியலில் இருக்கும் 20,503 விவசாயிகளுக்கு ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்ய இயலுமை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் எந்தவொரு நிலுவை தொகையொன்றும் | நிலுவைகள் ஏற்படாத வகையில் 60 வயதைப் பூர்த்தியடைந்த திகதியிலிருந்து ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. அவ்வாறான நிதிப் பிரச்சினை காணப்படுகையில் 2012 – 2013 காலப்பகுதி தொடர்பாக 90,573 விவசாயிகளுக்குத் உரித்தான ரூபா 3,033,329,200 ஓய்வூதியத்தை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்படாத வகையில் ஓய்வூதியத்திற்கு உரித்தினை பெறும் சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதிய பதிவேட்டிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந் நிலுவை தொகையை திறைசேரி நிதி ஏற்பாட்டின் பிரகாரம் எதிர்காலத்தில் ஒழுங்குமுறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் நிலுவை ஓய்வூதியத்தை நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய ஓய்வூதியமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளப்படும். | |
| (இ) | தற்போது காணப்படும் முறைமைக்கு பதிலாக விவசாய சமூகத்தினருக்காக புதிய ஓய்வூதிய முறைமை ஒன்றை அறிமுகப்படுத்து வதற்காக நிபுணர் குழு 2019 யூலை 01 அந் திகதி கூடியிருந்ததுடன் அக்குழுவிற்கு விவசாயிகள் ஓய்வூதிய முறைமை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 04 முன்மொழிவு திட்டங்களுக்குரியதாக கணக்கிடல் அறிக்கை தயாரித்தல், அத்தகைய 4 முன்மொழிவுகளல் தெரிவு செய்யப்பட்ட முறைமையை தயாரிப்பதற்குரிய தகவல்களை நிபுணர் குழவிற்கு மீள தொடர்புபடுத்தல் அந்த முன்மொழிவுகள் தொடர்பாக ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் ஆகஸ்ட் மாதத்திற்குள் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் அதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் கூட்டிணைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அது செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | விவசாய மற்றும் மீன்பிடி சமூகத்திற்காக புதிய ஓய்வூதிய முன்மொழிவு நடைமுறையொன்று அறிமுகப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு 9 சதவீத முதலீட்டு வீதத்தின் கீழ் விவசாய மற்றும் மீன்பிடி சமூகத்திற்காக ஓய்வூதியத்தை தயாரித்தல் பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டது. மேலும் இந்த முன்மொழிவுக்காக வருமானத்தை கணக்கிடும் நடைமுறையொன்றை கண்டு பிடிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. பயிர்ச் செய்கை வரி நிதியம் மற்றும் கொவிசெத லொத்தர் வருமானம் என்பவற்றை இதற்காக பயன்படுத்த முடியுமென அவதானிக்கப்பட்டது. புதிய அரசின் சௌபாக்கிய தொலை நோக்கு கொள்கை கூற்றில் புதிய விவசாய ஓய்வூதிய முன்மொழிவுத் திட்டம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அரச கொள்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அரசின் கொள்கையின் பிரகாரம் விரைவில் புதிய ஓய்வூதிய முன்மொழிவு திட்டத்தை தயாரித்து பங்களிப்பாளர் களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | செலுத்தப்படாத ஓய்வூதியம் பெறுபவரின் பணம் மற்றும் மரணித்த நபர்களின் விபரங்கள் நாளது வரையாக்குவதற்காக தபால்மா அதிபரால் பிராந்திய கணக்கு அலுவலகங்களுக்குரிய தபால் மற்றும் உப தபால் மா அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 2015 யூலை 07 ஆந் திகதிய விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவு கடிதத்தின் பிரகாரம் சபை மூலம் வழங்கப்பட்டிருந்த மின்னஞ்சல் முகவரிகளை பயன்படுத்தி செலுத்தப்படாத ஓய்வூதியம் பெறுவோரின் விபர அறிக்கையொன்று மாதாந்தம் பிராந்திய கணக்கு அலுவலகங்களில் தபால் மற்றும் உப தபால் அதிபர்களால் விவசாய காப்புறுதி சபைக்கு அனுப்பி வைக்க வேண்டிய வேண்டிய போதும் மாத்தறை மற்றும் கொழும்பு பிராந்திய கணக்கு அலுவலகங்கள் அவ்வாறு செய்யாமையால் மாத்தறை ரூபா 1,000,000 - ரூபா 1,700,000 மற்றும் கொழும்பு ரூபா ரூபா 100,000 – ரூபா 300,000 ஆன அளவொன்று ஆண்டு பூராகவும் விவசாய காப்புறுதி சபை மற்றும் பிராந்திய கணக்கு அலுவலகங்களுக்கு இடையே பரிமாற்றப்பட்டு வந்தன. | செலுத்தப்படாத ஓய்வூதியத்தை மீள் அனுப்புவது தொடர்பாக தபால் மா அதிபரால் வழங்கப்பட்டுள்ள 2015 யூலை 07 ஆந் திகதிய ஆலோசனை கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொண்ட அவதானிப்பு தொடர்பாக தபால் மா அதிபருக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஓய்வூதிய கொடுப்பனவு ஒவ்வொரு மாதம் 07 ஆந் திகதி முதல் 15 ஆந் திகதியிக்குள் வேலை செய்யும் 6 நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டுமெனவும் சகல விவசாய ஓய்வூதிய பொழிப்புக்கள் செலுத்தப்படாத ஓய்வூதியம் பெறுவோரின் விபரங்கள் மற்றும் எஞ்சிய பணத்தை அடுத்த மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அது தொடர்பாக பிராந்திய கணக்காளர் அறிவூட்டப்பட்டு அரச கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>தற்பொழுது மாத்தறை மற்றும் கொழும்பு பிராந்திய கணக்காளர்ளுக்கும் தெரியப்படுத்தப்பட்டு செலுத்தப்படாத ஓய்வூதியம் மற்றும் பெயர்ப்பட்டியலை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | செலுத்தப்படாத ஓய்வூதியம் பெறுபவரின் விபர அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |